மடு கல்வி வலயம்
மாதிரிப்பரீட்சை
க.பொ.த உயர் தரம் - வணிகக்கல்வி 2020

தரம்-13 பெயர்………………..

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**1 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4),(5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

1) வர்த்தகம் மட்டமல்ல ஒட்டுமொத்த வணிக செயற்பாடுகளினையும் அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் சென்ற ஒரு அடிப்படை காரணி பின்வருவனவற்றுள் எது?
   1. கைத்தொழில் புரட்சி
   2. இணையம்
   3. பணம்
   4. துணைநிலைச் சேவைகள்
   5. இலத்திரனியல் வணிகம

2) பின்வருவனவற்றுள் வணிக நடவடிக்கை ஒன்றாகக் கருதப்படுவது?
   1. அல்பிரட் வீட்டுத் தோட்டத்தில் இருந்து பெற்ற மரக்கறிகளை அயலவருடன் பரிமாறுதல்.
   2. விமல் தனது 600 000ரூ பெறுமதியான மோட்டார் வாகனத்தை 500 000ரூ ற்கு தனது நண்பனிற்கு விற்பனை செய்தமை.
   3. பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றினைந்து உயர் தர மாணவர்களுக்கான கருத்தரங்கு ஒன்றினை நடாத்துதல்.
   4. உதயா தினமும் தனது வீட்டுத்தோட்டத்தில் இருந்து கிடைக்கும் மரக்கறிகளை உணவிற்கு பயன்படுத்துகிறார்.
   5. ராஜி சுத்தமான குடிநீரினைப் போத்தலில் அடைத்து அதனை 1l ரூ50ற்கு தொடர்ச்சியாக விற்பனை செய்து வருகிறார்

3) COVID 19 எனப்படுகின்ற கொரனா வைரசானது உலக நாடுகளையே அச்சுறுத்தியுள்ளது. X நிரலில் காணப்படும் விடயங்கள் Y நிரலில் காணப்படும் எப்புறச் சூழல் காரணிகளுக்கு பொருத்தமானதாக காணப்படுகின்றது என்பதை தெரிவு செய்க.

| X | Y |
|---|---|
| 1. கொரனாவினால் இறப்பு வீதம்அதிகரித்து சென்றமை | A. தொழிநுட்ப சூழல் |
| 2. தனிமைப்படுத்தல் சட்டங்கள் பிரகடனப்படுத்தப்படுதல் | B. மக்கள் சூழல் |
| 3. பங்குச் சந்தையில் பங்குகளின் பெறுமதியில் வீழ்ச்சி ஏற்பட்டமை. | C. அரசியற் சட்ட சூழல் |
| 4. மக்களின் பழக்கவழக்கங்களில் மாற்றம் ஏற்பட்டமை. | D. சமூக கலாசார சூழல் |
| 5. பொறியியல் மாணவர்கள் தொற்று நீக்கி இயந்திரம் கண்டுபிடித்தமை. | E. பொருளாதார சூழல் |

1. AECDB 3. BCADE 4. BCEDA
2. ACDEB 5. DCEBA

4) வணிகத்தின் அக்சூழலுக்கான பலத்தையும் புறச்சூழலுக்கான வாய்பையும் எடுத்து காட்டும் விடையைத் தெரிவு செய்க.
   1. நிதி உறுதித்தன்மையும் ஊழியர்களின் விசேட திறன்களும்
   2. புதிய உற்பத்தி முறைகளும் நுகர்வோர் வாழ்கைப் பாங்குமாற்றமும்
   3. உள்ளூர் உற்பத்தி அதிகரித்தலும் சனத்தொகை வயது அதிகரித்தலும்
   4. வணிகளுக்கான வரிச்சலுகைளும் அரசு கடன் வழங்கலும்
   5. வியாபார சின்னம் காணப்படலும் புதிய வணிகம் ஆரம்பிகத் திட்டமிடலும்

5) கீழே வணிக அமைப்புக்களுடன் தொடர்புடைய (அ) பகுதிக்கு பொருத்தமான (ஆ) பகுதியை சரியாக தொடர்புபடுத்தினால் பெறப்படும் விடைத்தொகுதி

| அ | ஆ |
|---|---|
| A. பங்குடமை | 1. கடன் தீர்க்கும் ஆற்றல் பரிசோதனை |
| B. கம்பனி | 2. தனியுரிமைக் கட்டணம் |
| C. கூட்டுறவு | 3. ஜனநாயக செயற்பாடுகள் |
| D. அங்கிகார வணிகம் | 4. பரஸ்பர முகவராண்மை |

1. A-1 B-2 C-3 D-4
2. A-2 B-3 C-4 D-1
3. A-4 B-1 C-3 D-2
4. A-3 B-4 C-2 D-1 5.A-4 B-3 C-1 D-2

6) பிணையால் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றின் பண்பு அல்லாதது,
   1. பங்கு வழங்கலை மேற்கொள்ளும்
   2. அகவிதிச் சட்டக்கோவையில் ஒவ்வொரு அங்கத்தவரும் கம்பனி கலைக்கப்படுகின்ற போது பங்களிப்புச் செய்யவேண்டிய தொகை குறிப்பிடப்படல் வேண்டும்.
   3. ஆகக் குறைந்தது இரு அங்கதத்வர்களாவது இருத்தல் வேண்டும். உச்ச எண்ணிக்கைக்கு வரையறையில்லை.
   4. பொதுநோக்கமொன்றினை முன்வைத்து ஆரம்பிக்கப்படல்.
   5. கம்பனி இலாபப் பகிர்வினை மேற்கொள்வதில்லை.

7) வணிகமொன்று ஒழுக்கநெறியை கட்டியெழுப்பும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம் **அல்லாதது**.
   1. வணிகத்தின் தன்மை
   2. வணிகத்தின் போட்டியாளர்
   3. வணிக வாடிக்கையாளர்கள்
   4. நடைமுறை சாத்தியத்தன்மை
   5. தத்துவங்க்ளும் விமர்சனங்களும்

8) வணிகங்களின் சமூகப்பொறுப்பு தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்படாத துறை எது?
   1. மனித உரிமைகள்
   2. ஊழியர் உரிமைகள்
   3. சூழற் பாதுகாப்பு
   4. சமுதாயப் பங்கேற்பு
   5. உடமையாளரின் உரிமை

9) சமூக கலாச்சார நிலைபேண் அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்காக வணிகங்கள் கவனம் செலுத்தவேண்டிய காரணி பின்வருவனவற்றுள் எது?
   1. இடர் முகாமைத்துவம்
   2. உற்பத்தி செயன்முறையை ஊக்குவித்தல்
   3. புத்துருவாக்கங்களை அறிமுகப்படுத்தல்.
   4. மனித மூலதனத்தினைப் பராமரித்தல்.
   5. கழிவுப் பொருள் முாகமைத்தவத்தின் போது 6R எண்ணக்கருவினைப் பயன்படுத்தல்.

10) வணிகங்கள் இணைந்து செயற்படல் வணிகத்துறையின் புதிய போக்கொன்றாகும்.. இதில் ஒன்றிணைதலின் பண்பொன்றாக இனங்காணப்படுவது.
   1. ஒரு கம்பனி இன்னொரு கம்பனியின் சாதாரண பங்கு மூலதனத்தில் கூடுதலான அளவினைக் கொள்வனவு செய்தல்.
   2. கம்பனிகள் இரண்டு அல்லது பல ஒன்று சேர்ந்து செயற்படல் ஆகும்.
   3. ஒரு கம்பனி மற்றொரு கம்பனியின் சொத்துக்கள் பொறுப்புக்களை கொள்வனவு செய்வதன் மூலம் புதிய வணிகம் ஒன்றாக இணைதல்.
   4. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வணிகங்கள் பொதுவான முயற்சியில் ஈடுபடல்.
   5. மேற்குறிப்பிட்ட விடைகளுள் 1,3 ஆகியன சரியானவையாகும்.

11) காசோலை ஒன்றின் முகப்பில் சிறப்புமுறை கோடிடலில் கைமாற்றத்தகாதது என்ற சொல் பயன்படுத்தபடுவது தொடர்பில் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
   1. இவ்வாறான காசோலைகள் புறக்குறிப்பிடலின் பின் இன்னொருவருக்கு சாட்டுதல் செய்ய முடியாது
   2. இங்கு காசோலையின் முன் புறத்திலுள்ள விடயங்கள் காசோலையின் பின்புறத்திலும் வரையுணியின் கையொப்பத்துடன் காணப்படல்.
   3. இக் காசோலையிளை சாட்டுதல் செய்யும் போது சாட்டப்படுவோனுக்கு சாட்டுபவரை விட குறைந்த உரிமை காணப்படும்.
   4. இக் காசோலையினை சாட்டுதல் செய்யும் போது கூடிய உரிமை சாட்டுபவரை விட சாட்டப்படுவோனுக்கு உண்டு.
   5. வங்கியின் கருமபீடத்தில் சமர்ப்பித்து நேரடியாக காசாக மாற்ற முடியும்.

12) நிதிசார்ந்த ஊக்குவிப்பை மட்டும் சரியாக காட்டும் தொகுதி எது?
   1. ஆலோசனைசேவை நிதிரீதியானகடன்கள்.
   2. நிதிவசதிகள் சந்தைப்படுத்தல் வசதி
   3. உட்கட்டமைப்பு வசதி ஆலோசனை சேவை
   4. மீள்நிதியிடல் வசதி வரிச்சலுகை.
   5. நிதிவசதி உட்கட்டமைப்பு வசதி

13) நாட்டின் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள வேளையில் அனைத்து தரப்பினருக்கும் நம்பகரமானதும் விரைவானதுமான தகவல்களை வழங்குவது தொடர்பாக பொருத்தமான தொடர்பாடல் சாதனம் பின்வருவனவற்றுள் எது?
   1. வானொலி
   2. முகப்புத்தகம்
   3. அக இணையம்
   4. இணையம்
   5. குறுஞ்செய்தி

14) சிக்கல் தன்மை கொண்ட வெளிநோக்கிய அமையவியல் முறைக்கு (Heavy out bound logistic system ) உதாரணதமாக அமைவது.
   1. இரசாயனப் பொருள் உற்பத்தி
   2. விமான உற்பத்தி
   3. எரிவாயு உற்பத்தி
   4. ஆடை உற்பத்தி
   5. நுகர்வுப் பொருள் வநியோக நிறுவனம்

15) சரியான விடயம் பிழையான முறையில் இடம்பெறுகின்ற போது எவ் விடயம் முகாமைத்துவத்தினூடாக எதிர்பார்க்கப்படுகின்றது?
1. வினைத்திறனுடையதாகும.
2. பயனுறுதியற்றதாகும்.
3. வினைத்திறனுடையதும் பயனுறுதியற்றதுமாகும்.
4. பயனுறுதியுடையதும் வினைத்திறனற்றதுமாகும்.
5. வினைத்திறனற்றதும் பயனுறுதியற்றதுமாகும்.

16) வைத்தியசாலை கட்டுமானம் தொடர்பில் மிகவும் பொருத்தமான தள அமைப்பு எது?
1. செயன்முறைத் தள அமைப்பு
2. உற்பத்திப் பொருள் தள அமைப்பு
3. கலத்தள அமைப்பு
4. நிலையான இடத்தள அமைப்பு
5. தொழிற்பாட்டுத் தளஅமைப்பு

17) பின்வருவனவற்றுள் ஆசியான் ASEAN அமைப்பில் அங்கத்துவம் பெறாத நாடு எது?
1. சிங்கப்பூர்
2. இந்தோனேசியா
3. லாவோஸ்
4. வியட்னாம்
5. இலங்கை

18) இறக்குமதி நாட்டின் தேவைக்கேற்ப ஒரு நாடு ஏற்றமதி செய்யப்படுகின்ற சில விவசாய உற்பத்திப் பொருட்களின் பாவனைப் பொருத்தப்பாட்டினை உறுதிப் படுத்தி அந்நாட்டிலுள்ள ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப் படுகின்ற ஆவணம்
1. சுகநலச் சான்றிதழ்
2. கட்டுண்ட பண்டகசாலை அனுமதிப்பத்திரம்
3. நட்டஈட்டுக் கடிதம்
4. கப்பல் தளச்சீட்டு
5. ஏற்றுமதிக் குறிப்பு

19) இறக்குமதி நடைமுறைகளை ஒழுங்கு முறையில் காட்டும் விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.
A. விலைக்கூற்றுப் பெறலும் இறக்குமதி அனுமதிப் பத்திரமொன்றைப் பெற்றுக் கொள்ளலும்
B. ஏற்றுமதியாளருக்குக் கொடுப்பனவு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
C. கட்டளை (இன்டென்ட்) சமர்ப்பித்தல்.
D. பொருட்களைப் பெற்றுக் கொள்ளல்.
E. வெளிநாட்டு வழங்குனர் ஒருவரைத் தெரிவு செய்தலும் விலை விசாரணைக் கடிதம் அனுப்புதலும்

1. ABCDE
2. ACBED
3. DBECA
4. EACBD
5. ACDEB

20) சிவகுமார் என்பவர் கணணித் துறையில் வல்லுனர் ஆவார்.இவர் பல்வேறு விதமான கேக்குகளின் வடிவங்களை தரவிறக்கம் செய்து அதன் உதவியுடன் புதிய வடிவிலான கேக்கை வடிவமைத்து பல்வேற இலத்திரனியல் சாதனங்களின் உதவியுடன் உற்பத்தி செய்து தனது வாடிக்கையாளருக்கு வழங்குகின்றார். இச் செயன்முறையானது,
1. CAD
2. CAM
3. CAD,CAM
4. ROBO
5. F.M.S

21) இத்தாலியில் இருந்து வருகை தந்த நபரொருவர் கந்தான மலைத்தொடரில் சுற்றுலாப் பிரயாணத்தை மேற்கொண்டு பின்னர் கண்டியிலுள்ள ரோயல் விடுதியில் அவர் தனது இரு நாட்களை செலவிட்டார். இதன் போது விடுதியறையில் உள்ள கட்டில்கள் சுத்தமான முறையிலும் சொகுசாகவும் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. இங்கு கோடிட்ட கூற்றுக்குப் பொருத்தமான வாடிக்கையாளர் பெறுமதி கட்டமைப்பொன்றாக இனங்காணப்படுவது?
1. உற்பத்திப் பொருள் மையநலன்
2. அடிப்படை உற்பத்திப் பொருள்
3. எதிர்பார்க்கப்பட்ட உற்பத்திப் பொருள்
4. விருத்தியாக்கப்பட்ட உற்பத்திப் பொருள்
5. சாத்திய உற்பத்திப் பொருள்

22) பின்வரும் நிதி முகாமைத்துவ தீர்மானங்களுள் ஒரு முதலீட்டுத் தீர்மானமாக கருதக்கூடியது?
1. நிறுத்தி வைத்த இலாபம் தொடர்பான தீர்மானம்
2. வங்கிக் கடன்கள் தொடர்பான தீர்மானம்
3. கடன்பட்டோர் தொடர்பான தீர்மானம்
4. பங்குகளை வழங்கல் தொடர்பான தீர்மானம்
5. கடன் கொடுத்தோர் தொடர்பான தீர்மானம

23) ஊழியர்கள் அவர்களின் செயற்றிறனுக்கேற்ப பதவி உயர்வு பெறுவதற்கும் சக ஊழியர்களிடமிருந்தான தேவையற்ற போட்டியினைத் தவிர்ப்பதற்குமாக உள்ளக ரீதியான ஆட்சேர்ப்பிற்கு மிகவும் பொருத்தமான முறை எது?
1. ஊழியர் பரிந்துரை
2. மரபுரிமைத் திட்டம்
3. உள்ளக வலையமைப்பு
4. வேலை அறிவித்தல்
5. நேர் முகப் பரீட்சை

24) ரவி இலங்கை கல்வி நிர்வாக சேவையின் அதிபராவார் அவருக்குரிய பதவியினடிப்படையில் கிடைக்கும் அதிகாரத்தை அழைப்பது,

1. சட்ட ரீதியான அதிகாரம்
2. தொடராகக் கிடைக்கும் அதிகாரம்
3. விசேடத்துவமான அதிகாரம்
4. நிர்வாக ரீதியான அதிகாரம்
5. ஆளுமை ரீதியான அதிகாரம

25) விற்பனையாளர்களினால் வாடிக்கையாளர் சந்தை துண்டமாக்கல் செய்வதற்காக பயன்படுத்திய நுகர்வோரின் பண்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

A. பால் நிலையம்
B. வருமானம்
C. குடும்பமொன்றின் பருமன்
D. வாழ்க்கைப் போக்கு
E. ஆளுமை
F. தொழில

இவற்றுள் சமூக விஞ்ஞான ரீதியான காரணிகளை மட்டும் சரியாக காட்டும் விடையாக இருப்பது,

1. ABCD 2. ACDE 3. ABCE 4. BCDE 5. ABCF

26) வணிகத்திட்டம் என்பது தொடர்பில் சில கருத்துக்கள் முன் வைக்கப்பட்டுள்ளன இவற்றுள் மிகச் சிறந்த கருத்தை தெரிவு செய்க.

1. எதிர்வரும் ஆண்டொன்றிற்காக வணிக நிறுவனம் ஒன்றினால் தயாரிக்கப்பட்ட ஒரு வருடாந்த மதிப்பீடாகும்.
2. எதிர்வரும் மூன்று ஆண்டகளுக்காக சகல குறிக்கோள்களையும் உள்ளடக்கிய ஒரு ஆவணமாகும்
3. வணிகத்திட்டமொன்றில் இயலுமை ஆய்வானது இன்றியமையாத ஒரு கூறாகும்.
4. வணிகத்திட்டத்தின் விரிவான தகவல்களை சுருக்கமாக விளக்கவது வணிக விபரணமாககும்.
5. வணிகத்தின் உற்பத்தி சந்தைப்படுத்தல் மற்றும் நிதி நடவடிக்கைகளை விளக்கும் ஒரு ஆவணமாகும்

27)

| X நிரல் | Y நிரல் |
|---|---|
| 1. சேவைகள் | A. இலங்கையில் எரிபொருள் விநியோகம |
| 2. எண்ணங்கள் | B. உலக அந்தம் |
| 3. நிகழ்வுகள் | C. காணி ஒப்புறுதி பத்திரம் |
| 4. இடம் | D. வணிகம் வங்கிக் கருமங்களில் ஈடுபடல் |
| 5. ஆதனம் | E. சர்வதேச வர்த்தகக் கண்காட்சி |

மேலே X நிரலில் உற்பத்திகளின் விரிவான அடைப்படைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுக்கமைய Y நிரலில் குறிப்பிட்டுள்ள கூறுகளை சரியான ஒழுங்கு முறையில் காட்டும் விடையானது.

1. A,C,D,E,B 2. D,A,E,B,C 3. C,B,D,E,A 4. D,C,B,E,A 5. D,A,B,C,E

28) ஒரு நல்ல பண்ட பெயருக்கு இருக்க வேண்டிய சிறப்பம்சம் தொடர்பான தவறான கூற்று?

1. சுருக்கமானதாகவும் எளிமையானதாகவும் இருக்க வேண்டும்
2. நினைவு படுத்தக்கூடியதாக இருக்க வேண்டும்.
3. ஏனைய மொழிகளிலும் இனங்காணக்கூடியதாக காணப்படல்
4. கலாசாரத்திற்கு பொருத்தமானதாக காணப்படல்
5. விற்பனை, இலாபத்தை அதிகரிக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

29) பின்வருவனவற்றில் விலையிடலின் நோக்கமாகக் கருத முடியாதது?

1. சந்தையில் நிலைத்திருத்தல்
2. சந்தைத் தலைமைத்துவத்தை கைப்பற்றல்
3. உற்பத்திப் பொருள் கிரயத்தின் அடிப்படையில் தீர்மானித்தல்
4. போட்டியாளரை ஓரம் கட்டல்
5. சமூகப் பொறுப்பை நிலைநாட்டல்

30) வணிகத்திட்டம் ஒன்று எதனை செய்ய இருக்கின்றது என்பதை பொழிப்பாக கூறுவது?

1. நிறைவேற்றுச் சுருக்கம்
2. தொழில் விபரணம்
3. சந்தைப்படுத்தல் திட்டம்
4. செயல் திட்டம்
5. மனிதவளத் திட்டம்

**31 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு பொருத்தமான சொற்களுடன் வெற்றிடங்களை நிரப்பி விடை எழுதுக.**

31) புதிய முயற்சியாளர்களின் வணிக நடவடிக்கைகளுக்கான ……………… தேவைப்பாட்டினை நிறைவு செய்யும் நோக்கத்தில் செயற்படுகின்ற நிறுவன வகை…………………………………ஆகும்.

32) (அ) ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களது விபரங்கள், விலைமட்டங்கள், கொடுப்பனவுக்கான நிபந்தனைகள், பயணப் பாதை,நிராகரிக்கப்படுகின்ற நிபந்தனைகள் போன்ற விபரங்கள் உள்ளடக்கப்பட்ட ஆவணம்………………………….. ஆகும்.

(ஆ) ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் பணத்தைக் கொண்டு செல்லும்பொழுது இடம்பெறக்கூடிய சேதத்தை உள்வாங்குவதற்காகப் பெற்றுக் கொள்ளும் காப்புறுதி ……………………… காப்புறுதியாகும்.

33) சிற்றளவு வணிகர் கடன் வழங்குவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி அனுசரணையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் கடன் திட்டமுறை ஒன்று…………………………ஆகும். இதில் ………………. வங்கி மற்றும் ஏனைய வணிக வங்கிகளும் தொடர்புபட்டுள்ளன.

34) வணிக வங்கிகள் திரவத்தன்மைப் பிரச்சினைகளை எதிர்நோக்கும் சந்தர்ப்பங்களில் ……………………….. இறுதிக் கடன் வழங்குநராக வழங்கும் கடனுக்கு அறவிடுகின்ற வட்டி வீதம் ……………………ஆகும்.

35) (அ) அனுப்புவரினால் தொலைபேசி முறையினைப் பயன்படுத்தி வாய்மொழி மூலம் வழங்கப்படுகின்ற செய்தியினை வலையமைப்பின் மூலம் பிரதியீடு செய்யப்பட்டுப் பின்னர் பெற்றுக் கொள்வதற்காகக் தட்டொன்றில் களஞ்சியபப்படுத்தல் எனப்படுகின்ற ஒலிப் பதிவுச் செயன்முறை ……………………..ஆகும்.

(ஆ)......................................எனப்படுவது பெறுபவரால் செவிமடுக்கப்பட்ட அல்லது பெறப்பட்ட செய்தி தொடர்பாகச் செயற்படும் முறையாகும்.

36) தொடக்கத்திலிருந்து இறுதி வரையில் உருப்படியொன்று உற்பத்தி செய்யப்படுவதுடன் வாடிக்கையாளர்களின் ………………………… கட்டளையின் அடிப்படையில் சமகாலக் கேள்வியினை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தியினை மேற்கொள்ளல் ……………………… உற்பத்தி எனப்படும்.

37) (அ) “பாரிய பகுதியொன்றை உள்ளடக்கி உருவாக்கப்படுகின்ற கணினி வலையமைப்பொன்றாகும்.” உலகம் பூராவும் பரம்பியுள்ள ஆயிரக்கணக்கிலான கணினி வலையமைப்புக்கள் தொடர்புபட்டு தகவல் பரிமாற்றப்படுகின்ற எந்தவொரு வேளையிலும் கூட தொடர்புபடுத்தக்கூடிய செயற்பாட்டு நிலைமையுடன் கூடியதான நிலைமையொன்று **……………………………….** எனப்படும்.

(ஆ) நாடொனறின் அரசியல் எல்லைக்குள் இடம்பெறும் வியாபாரம் ……………………………… என அழைக்கபப்டும்.

38) (அ) எதிர்காலத்தில் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் வணிக நிறுவனமொன்றிற்கு உரிமையாக இருக்கின்ற நிகழ்கால நிதியத்தை விளைதிறன் கொண்டதாக நீண்டகாலச் சொத்துக்களில் அல்லது நீண்டகாலச் செயற்றிட்டங்களில் முதலீடு செய்வதற்கான திட்டம் ……………………… ஆகும்.

(ஆ) குறிப்பிட்ட நிதியாண்டொன்றில் நிறுவனத்திற்கு உண்மையாக அல்லது உத்தேசமாக காசு உட்பாய்ச்சல் இடம்பெற்ற முறைகளையும் அக்காசு வெளிப்பாய்சச்ப்பட்ட முறைகளையும் பகுப்பாய்வு செய்து காட்டும் கூற்றே ………………………………ஆகும்.

39) முழுமையான சந்தையில் இருக்கின்ற பல்வேறு பண்புகளைக் கொண்ட வாடிக்கையாளர்களை இனங்கண்டு அவர்களினுள்ளும் நிறுவனத்திற்கு மிகவும் ஈர்ப்புத்தன்மையுடனும் …………………… தன்மையாகவும் சேவை செய்யக்கூடிய சந்தைப் பங்கே **…………………………** எனப்படும்.

40) யாதேனும் குறிப்பிட்ட நோக்கமொன்றை நிறைவேற்றுவதற்காக தொழிலொன்றை அமைத்தல் அல்லது தோற்றுவித்தல் என்பது இதன் எளிமையான விளக்கமாகும். அதாவது குறிப்பிட்ட நோக்கமொன்றை நிறைவேற்றும் பொருட்டு ஒழுங்கமைக்கப்பட்ட வேலை அலகொன்று எனும் வகையில் பணிகள், …………………., பொறுப்புக்கள் என்பனவற்றைத் தயாரித்தலே …………………………………ஆகும்.

**41 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு பொருத்தமான விடையளிக்க.**

41) கம்பனியொன்றைக் கூட்டிணைக்கும் போது பதிவு செய்வதற்காக வேண்டி கம்பனிப் பதிவாளருக்கு சமர்பிக்க வேண்டிய ஆவணங்கள் யாவை?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………..

42) முயற்சியாண்மையின் சமூக, பொருளாதார அனுகூலங்கள் நான்கினைக் குறிப்பிடுக

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

………………..

43) இலங்கையிலுள்ள நிதி நிறுவன கட்டமைப்பில் ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்களுக்கு 4 உதாரணங்கள் தருக.

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

44) தீ அபாயக் காப்புறுதியின் அடிப்படையில் தீ அபாயங்களுக்கு மேலதிகமாக மேலதிகத் தவணைக் கட்டணம் செலுத்துவதன் மூலம் தீ அபாயக் காப்புறுதி ஒப்பந்தத்தை நீட்சிப்படுத்தி உள்வாங்கக்கூடிய இடர்கள் 4 தருக.

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

45) விளைதிறன் கொண்ட தொடர்பாடலொன்றில் இருக்கவேண்டிய பண்புகள் 4 தருக

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

46) இலட்சிய நோக்கக் கூற்றொன்றைத் தயாரிக்கும்பொழுது அதில் உள்ளடக்க வேண்டிய காரணிகள் யாவை?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

47) செயற்பாட்டு முகாமைத்துவத்திற்குரிய கருமங்களைப் பட்டியலிடுக.

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

48) நவீன பரிமாற்றுப் பொருளாதாரத்தின் அடிப்படையில் பயன்படுத்தப்படுகின்ற அடிப்படைச் சந்தையின் வகைகள் எவை?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

49) முழுமையான சந்தைப்படுத்தல் எண்ணக்கருவின் நான்கு கூறுகளும் யாவை?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

50) சிறந்த தொழில் வழங்குநர் - ஊழியர் உறவினால் நிறுவனமொன்றிற்கு கிடைக்கப் பெறுகின்ற அனுகூலங்கள் நான்கினை எழுதுக.

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………